ஒன்பதாம் அத்தியாயத்தின் பரமஸாரம்

வாஸுதேவன் பரம கருணையுடன்,அர்ஜுனனை நோக்கிக் கூறலானான்—நண்பனே!மிகவும் ரஹஸ்யமான பக்தி யோகத்தைப் பற்றியும்,அதன் அங்கங்களைப் பற்றியும் உனக்குக் கூறப் போகிறேன்.

அர்ஜுனன்—"கண்ணா!பரம ரஹஸ்யமான விஷயங்களையெல்லாம் பரம கருணையுடன் உபதேசிக்கிறாயே.அதைப் பெறும் தகுதி எனக்கு இருப்பதாக தோன்றவில்லையே?

பரந்தாமன்—"பார்த்த!உனக்கு அந்தத் தகுதி உண்டு.உன்னிடம் அஸூயை இல்லை. அஸூயை அற்றவன் தான் ரஹஸ்யார்த்தத்தைப் பெறுகைக்குச் சிறந்த பாத்திரம்" என்றான்

விஜயன்—'வாஸுதேவ!நான் அஸூயையற்றவன் என்பதை நீ எவ்விதம் அறிந்தாய்?என்றான்.

பகவான்—'பார்த்த!என் பெருமைகளையெல்லாம் உன் முன்னே விவரித்து கூறுகிறேன்.அவற்றைக் கேட்டு உன் முகம் சற்றும் வாட்டம் அடையவில்லை. என் குணத்தை நீ பொறாதவனாக இருந்தால்,உன் எண்ணத்தில் உள்ள அஸூயை முகத்தில் தென்படாதா?பிறர் உத்கர்ஷத்தை ஸஹியாமையன்றோ அஸூயை?"என்றான்.

விஜயன்—'மாதவ!நீ எனக்கு உபதேசிக்கப் போகிற விஷயத்தின் சிறப்பு என்ன?

க்ருஷ்ணன்—'அன்பனே!நான் சொல்லப்போகும் விஷயம் வித்யைகளில் சிறந்தது, ரஹஸ்யங்களில் உயர்ந்தது,சகல பாவங்களை போக்கி,பகவானை நேரில் காண்பித்து மோக்ஷத்தை அளிக்கக் கூடியது' என்றான் பகவான்

அர்ஜுனன்—'கோவிந்தா!ஸுகமகவும் ஸுலபமாகவும் செய்யக்கூடிய பக்தியோகத்தை அனைவரும் செய்து சிறந்தப் பலனை பெறலாமே,ஆனால் பலரும் ஏன் அதை செய்வதில்லை?

பகவான்—'விஜய!இந்த உத்தமமான பக்தியோகத்திற்கு தகுதியற்ற மாடு முதலியவற்றைப்பற்றி நன் கவலைப்படவில்லை.இதை செய்யத் தகுதிகளிருந்தும் பலர் இதில் சிரத்தையின்றி ஸம்ஸார ஸாகரத்திலேயே உழல்கின்றனரே;அவர்களைப் பற்றித் தான் நான் கவலை அடைகிறேன்.

கௌந்தேயன்—"பகவானே!பக்தியோகம் என்பது உன்னைப் பற்றி சிந்திப்பதுதானே? உன்னுடைய அருமை பெருமைகளையும்,மகிமைகளையும் பரக்கக் கூற வேண்டும்" என்றான்

பகவான்—"பாண்டவ!சராசராத்மகமான ப்ரபஞ்சத்தில் நான் எங்கும் நிறைந்து இருந்தாலும் என்னை யாரும் காண்பதில்லை. தத்துவத்தை ஆராய்ந்தால்,நான் அவற்றில் இல்லை என்றுகூடக் கொள்ளலாம்"என்றான்

அர்ஜுனன்—"கண்ணா!எங்கும் நீ சூழ்ந்திருப்பது உண்மையானால்,அவற்றில் இல்லை என்பது எப்படி ஸங்கதமாகும்"என்றான்

பகவான்—அர்ஜுன!எங்கும் நான் நிறைந்திருக்கிறேன் என்பதுதான் வாஸ்தவம். அவற்றில் நான் இல்லை என்பதை விளக்குகிறேன் கேள்.நீ உன் உடலில் இருக்கிறாய்.நீ அதில் இல்லாமற்போனால் உன் உடல் உடலாக இருக்காது; சடலமாகும்;அது அழிந்துவிடும்.உடலுக்கு ஸத்தை—இருப்பு உன்னாலே.உடலாலும் உனக்கு ப்ரயோஜனம் உண்டு என்பதை மறுக்க முடியாது. உடல் இல்லாமல் உன்னால் தர்ம காரியங்களை செய்ய முடியாதே.கால் இல்லாமல் என் ஆலயத்தை நோக்கி

## ஒன்பதாம் அத்தியாயத்தின் பரமஸாரம்

உன்ளுல் வர முடியுமா? காது இல்லாமல் நான் சொல்வதைக் கேட்க முடியுமா?அதனுல் ஒவ்வோர் அவயத்தாலும் பலன் உண்டு. நான் அப்படியல்ல, அவாப்தஸமஸ்தகாமன்;எல்லாம் நிரம்பியவன். இந்தப் ப்ரபஞ்சமான உடலால் எங்கு எந்த உபகாரமும் கிடையாது. அவற்றில் இருப்பது, செயல்படுத்துவது முதலியனவெல்லாம் எனக்கு லீலை, விளையாட்டு என்று பெரியோர் கூறுவர்

அர்ஜுனன்–"கண்ணு!உன் பெருமைகளையெல்லாம் மேலும் கேட்க விரும்புகிறேன்" என்ருன்.

பகவான்–"விஜய!எல்லாம் என்னிடத்தில் உள்ளன என்பதும், எதுவுமே என்னிடத்தில் இல்லை என்று கூடச் சொல்லலாம்.

அர்ஜுனன்–"கோவிந்தா!உன்னுடைய கூற்று பரஸ்பரம் முரண்படுகிறதே. விளக்கிக் கூறினுல் கலக்கம் தீரும்" என்ருன்

வாஸுதேவன்–"அன்பனே!எல்லாம் என்னிடத்தில் உள்ளது என்பதுதான் வாஸ்தவம். அவை என்னிடத்தில் இல்லை என்பதன் கூற்று ,உலகத்தில் ஒரு பொருள் மற்றொரு பொருளில் இருப்பதுபோல் அவை என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவிப்பதுதான். நீ ஒரு பொருளைத் தலையால் தாங்கலாம், தோளால் தாங்கலாம், கையால் தாங்கலாம். நான் ஸங்கல்ப மாத்திரத்தால் தாங்குகிறேன். எனக்கே விலக்ஷணமான ஸாமர்த்தியம் இது. விச்வாமித்திரர் தமது தபோபலத்தால், திரிசங்குவைக் கீழே விழாமல் தாங்கினதுபோல் நான் யாவற்றையும் தாங்குகிறேன்"என்ருன். எல்லா ப்ரபஞ்சங்களையும் நானே படைக்கிறேன், காப்பாற்றுகிறேன், அழிக்கிறேன். படைப்பில் ஏற்படும் வ்யத்யாஸத்திற்கு நான் காரணமன்று. அவரவர் கர்மமே காரணம். அசேதனமான பிரகிருதி என் ஸங்கல்பத்தை அநுஸரித்து பலவிதப் பரிணுமங்களைப் பெறுகிறது.

விஜயன்–"பரந்தாமா!எல்லா விதத்திலும் மிகவும் சிறந்தவனுன உன்னை ஏன் எல்லோரும் மதித்துப் போற்றுவதில்லை?"என்ருன்.

பகவான் வருத்தத்துடன்–பக்தனே!என்னுடைய அவதாரத்தின் தத்துவத்தை உணரக்கூடிய பாக்கியமற்றவர்களான ஜனங்கள் என்னுடைய மனித உடலையும், நடை உடை பாவனைகளையும் பார்க்கினறனரே தவிர, என் ஈடு இணையற்ற யானைத் தொழில்களைக் காணவில்லையே! ஆகையால் இவர்கள் என்னை ஸாதாரண மனிதனுகவே கருதி கண்டவாறு ஏசி அலக்ஷியம் செய்கின்றனர். ராஜஸர்களாகவும், தாமஸர்களாகவும் இருக்கும் அந்த மூடர்கள் ஜாயமான கடாக்ஷமற்றவர்கள். அவர்கள் என் விஷயத்தில் செய்ய நினைப்பதை நான் ஆரம்பத்திலேயே துண்டித்துவிடுகிறேன். அவர்களுடைய மனோரதம் பயனற்றதாகி ஆரம்ப காலத்திலேயே சிதறி விடுகின்றன என்ருன் பகவான்.

அர்ஜுனன்–"கண்ணு!உன்னிடத்தில் ஆருத காதல் கொண்டவர்களின் பெருமைகளையும் செயல்களையும் விவரமாகக் கூற வேண்டும்" என்ருன்.

பகவான்–பார்த்த!பிறக்கிறபோது என் கடாக்ஷத்துக்கு இலக்கானவர் பரம ஸாத்துவிகர்களாக இருப்பர். அவர்கள் மகாத்மாக்கள். நான் உலகங்களுக்கெல்லாம் ஒரே காரணம் என்ற தெளிவு அவர்களுக்கு இருக்கிறது. என் நாமாக்களை அன்புடன் அநவரதம் உச்சரிக்கின்றனர். குளம் வெட்டுதல், கோபுரம் கட்டுதல் முதலிய நற்செயல்களை என் பிரீதியை உத்தேசித்தே செய்கின்றனர். பக்தியுடன் என்னையே வணங்குகின்றனர். சராசராத்மகமான ப்ரபஞ்சம் எல்லாம் என் சரீரம்;அவற்றுக்கெல்லாம் நான் ஒருவனே ஆத்மா என்ற தெளிவைப் பெற்று, ஸர்வபூதாந்தர்யாமியாக என்னை உபாஸிக்கின்றனர் என்ருன் பகவான்.

அர்ஜுனன்–"ஸ்வர்க்காதி பலனை கருதி யாகாதி கர்மங்களைச் செய்பவர்களின் நிலை என்ன"?என்ருன்

ஒன்பதாம் அத்தியாயத்தின் பரமஸாரம்

பகவான்–"பாண்டவ!வேதாந்தத்தில் கூறப்பெறும் தத்துவங்களை அறியாமல்,கர்மகாண்டத்தில் கூறப்பெற்றிருக்கும் ஸோமயாகம் முதலியவற்றைச் செய்பவர் ஸ்வர்க்கலோகம் சென்று பலனை அநுபவித்துவிட்டு கர்மத்தின் முடிவில் பூமிக்குத் திரும்புகின்றனர்.பலனைக் கருதி கர்மாக்களைச் செய்பவர்கள் கண்ட பலன் போவதும் வருவதும் தான்" என்றான்.

அர்ஜுனன்–"மதுஸூதன!மற்ற பலனைக் கருதாமல் பக்தியுடன் எப்பொழுதும் உன்னையே உபாஸிப்பவர்களின் நிலை என்ன? என்றான்

மதுஸூதனன்–'அறிஞனே! பலனும் உபாயமும் நானே என்ற தெளிவுடன் அநவரதம் என்னையே உபாஸிப்பவர்களின் யோகக்ஷேமங்களையே நான் நிர்வகிக்கிறேன்.யோகம்– இதுவரை கிடைக்காததைப் பெறுவது,லாபம் கிடைத்ததை நழுவவிடாமல் காப்பது.நான் என் பக்தர்களை மோக்ஷம் அடையச் செய்கிறேன்.பெற்ற மோக்ஷத்தையும் இழக்காதபடிச் செய்கிறேன். என்னைச் சரணம் அடைந்தவர்களுக்கு இம்மையில் வரக்கூடிய யோக க்ஷேமங்களையும் நானே நிர்வகிக்கிறேன்.கிடைத்தது அழியாதபடியும் காக்கிறேன்' என்றான் பகவான்

அர்ஜுனன்–"பரந்தாமா!மற்ற தேவதைகளிடம் பக்தியுடையவன்,மிகுந்த சிரத்தையுடன் அவர்களை ஆராதிக்கிறான்.அவனுக்குக் கிட்டும் பலன் யாது?"என்றான்

பகவான்–"மற்றத் தேவர்களை ஆராதிப்பவரும் உண்மையில் என்னையே ஆராதிக்கின்றனர். அந்தத் தேவர்களுக்கும் அந்தராத்மா நானே.இந்த உண்மையை அறிந்து தேவதாந்தரங்களை ஆராதித்தால் அந்தக் கர்மாவுக்குக் கிரமமாக கிடைக்க வேண்டிய பலன் கிட்டும்.அந்தத் தெளிவு இல்லாமல் தேவதாந்திரங்களே ஆராதிக்கப்பெறுவதாகக் கருதிக் கர்மாவைச் செய்தால் முறைப்படி கிடைக்கவேண்டிய பலன் கூடக் கிட்டாது.மிகவும் அல்பமான பலனே கிட்டும்.

என்னையே நினைத்துச் செய்தாலும் மற்றத்தேவர்களை நினைத்துச் செய்தாலும் எல்லாக் கர்மங்களுமே என் ஆராதனம்தான்.அவற்றால் பிரீதி அடைபவன் நானே.பலனை அளிப்பவனும் நானே.இதைச் சரிவர அறியாமல் கர்மாக்களை செய்பவரகளுக்கு அல்ப பலனே கிட்டும் அதுவும் விரைவில் அழியும். "மற்றவர்களைக் குறித்துச் செய்யும் கர்மாக்களுக்கும் உன்னையே உத்தேசித்துச் செய்யும் கர்மாக்களுக்கும் செய்யும் முறையில் ஏதாவது வ்யத்யாஸம் உண்டா?" என்று வினவினான் விஜயன்

பகவான்–"விஜய! செய்யும் கர்மாவில் எவ்வித வ்யத்யாசமும் கிடையாது.ஸங்கல்பத்தில்தான் வ்யத்யாஸம்.தர்சபூர்ணமாஸாதி கர்மாக்களால் இந்திராதிகளை ஆராதிப்பதாக ஸங்கல்பித்துக் கொண்டு கர்மாவைச் செய்பவர்,இந்திராதி தேவதைகளைப் பெறுகின்றனர்.பித்ருக்களை ஆராதிப்பதாக ஸங்கல்பித்துக்கொண்டு கர்மாவைச் செய்பவர் பித்ருக்களை அடைகின்றனர்.யக்ஷ ரக்ஷ: பிசாசங்களை ஆராதிப்பதாக ஸங்கல்பித்து அதே கர்மாவைச் செய்பவர் பூதங்களை அடைகின்றனர்.மற்றவர், அழியக்கூடிய அல்ப பலனைப் பெறுகின்றனர்.அதே கர்மாவால் என்னை ஆராதிப்பவன் அனந்தமாயும்,சாச்வதமாயும் இருக்கும் பலனைப் பெறுகிறான்" என்றான் பகவான்.

அர்ஜுனன்–"பக்தவத்சல!நீ தேவாதி தேவன்.ஆகையால் உன்னை ஆராதிப்பது எளிதல்ல என்று கூறுகின்றனரே" என்றான் பார்த்தன்

பகவான்–"அன்பனே!என்னைவிட மிகவும் ஸுலபர் வேறு யாரும் இல்லை.நான் பக்த பராதீனன்.பக்தி ஒரு அம்சம் இருந்தால் போதும்;அனைவரும் என்னை ஆராதிக்கலாம்.நான் பக்தியில் உள்ள தாரதம்யத்தைப் பார்க்கிறேனே தவிர் அவர்கள் ஸமர்ப்பிக்கும் பதார்த்தங்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கணிசிப்பதே இல்லை. அனைவரும் என்னை ஆராதிக்கலாம்;உள்ளதைக் கொண்டு ஆராதிக்கலாம்;

# ஒன்பதாம் அத்தியாயத்தின் பரமஸாரம்

நான் அபேக்ஷிப்பவை இரண்டு. ஒன்று என்னிடத்தில் அசஞ்சலமான பக்தி;மற்றொன்று– நம் பொருளைப் பகவானுக்கு ஸமர்ப்பிகிறோம் என்று எண்ணுமை. இந்த இரண்டு அம்சங்கள் இருந்தால் இலையோ, கனியோ, பூவோ, தண்ணீரோ இவற்றில் எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு என்னை ஆராதிக்கலாம். எனக்கு வேண்டியது அன்பே தவிர பொருள் அல்ல.

"கண்ணா!நான் செய்யும் பல பல கர்மாக்களை உன்னிடம் சமர்ப்பிக்கலாமா?கர்மாவைச் செய்யும் எனக்கு மேலும் என்ன என்ன மனோபாவம் தேவை" என்றான் பார்த்தன்

"பணம் ஸம்பாதிப்பது முதலிய லௌகிகச் செயல்கள், நீயாகவே விரும்பிச் செய்யும் உண்கிற செயல், சாஸ்திரம் கூறினபடி யாகம் முதலிய செயல்கள், இமை கொட்டுதல், மூச்சு விடுதல் இவை அனைத்தையும் என்னிடம் ஸ்மர்ப்பிக்கலாம். கர்மாவைச் செய்யும் உன்னுடையவும், சில கர்மாக்களில் ஆராத்யராகத் தோற்றும் தேவர்களுடையவும் ஸ்வரூபம், ஸ்திதி முதலியன எல்லாம் என் அதீனமாகையால் நானே கர்த்தா;நானே கர்ம ஸ்மாராத்யன், நானே போக்தா என்று நினைத்துக் கர்மாவைச் செய்ய வேண்டும். இவ்விதம் செய்பவர் பந்தகங்களான புண்ணிய பாவங்களிலிருந்து விடுபடுவர்" என்றான்.

கௌந்தேயன்–"கண்ணா!உனக்குப் பிராம்மணர்களிடம் பிரியம் அதிகம்;மற்றவர்களிடம் பிரீதி குறைவு எங்கின்றனர். நீ பற்பல தாரதம்யங்களைப் பார்ப்பவன் என்று கூறுகின்றனரே. அந்தக் கூற்றில் பசையுண்டா?"என்றான் பார்த்தன்

பகவன்–"பக்தனே!எல்லோரும் எனக்கு சமம். ஜாதி மத வ்யத்யாஸங்களைப் பார்ப்பது கிடையாது. ஏழை, பணக்காரன், அழகன், குரூபி, படித்தவன், முட்டாள் என்ற வ்யத்யாஸம் கிடையாது. எல்லாவிதத்திலும் தாழ்ந்திருந்தாலும் ,என்னிடத்தில் பக்தி இருந்தால் அவனை எனக்கு பிடிக்கும். எல்லா விதத்தில் சிறந்திருந்து என்னிடத்தில் பக்தி இல்லையெனில் எனக்குப் பிரீதி கிடையாது" என்றான் பரமன்

"துராசாரர் அதாவது பாவிகள் உன்னை அடைய முடியாது என்று கூறுகின்றனரே?அது உண்மையா? என்றான் பார்த்தன்.

பாண்டவ!மகாபாவியும் என்னை அடையலாம். வாஸுதேவனை நானே எல்லாம் உபாயம், பலன் என்ற உறுதியுடன் என்னை பூஜிப்பவன் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் முதன்மை பெற்றவன். அவனது அநாசாரத்தைக் கண்டு நான் நெகிழக் கூடாது. அவன் உறுதியைக் கண்டு அவனைப் போற்ற வேண்டும்" என்றான் பகவான்.

"நீயே எல்லாம் என்று உறுதி இருந்தால் மாத்திரம் போதுமா?அவன் செய்யும் பாவங்களே அவன் உறுதியைக் குலைத்து விடாதா?காலக்ரமத்தில் அவன் பக்தி குன்றி விடாதா?" என்றான் அர்ஜுனன்.

"அர்ஜுன!என் பக்தன் அழிய மாட்டான். நான் அவனை அழிய விடமாட்டேன். அவன் விரைவில் பாவங்களிலிருந்து விரதனாவான். நீ சப்தமிட்டுச் சொல். நான் என் ப்ரதிஜ்ஞயை விட்டாலும், பக்தனுடைய ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றியே தீருவேன்" என்றான் பகவான்

கிருஷ்ணா!பிறந்த பிறகு பாவத்தைச் செய்பவர்களை நீ ஏற்றுக்கொண்டாலும், பாவத்தாலேயே பிறவியைப் பெற்றவர் விஷயத்தில் உன் நிலை என்ன" என்றான் பார்த்தன்

பார்த்த!என் திருவடியை யாவரும் பற்றலாம். பிறக்கும் முன் பாவம், பிறந்த பின் பாவம் என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. பெண்கள், வைச்யர், வேளாளர் இவர்கள் பிறவி பாவத்தால் எற்பட்டதே. அவர்களும் என்னைப் பற்றி உயர்ந்த கதியை அடையலாம். அவர்களே அடையலாம் என்றால் புண்ணியத்தால் பிறந்து, புண்ணிய செயல்களை செய்பவர் பற்றி கேட்கவும் வேண்டுமோ"என்றான் பகவான்.

ஒன்பதாம் அத்தியாயத்தின் பரமஸாரம்

கண்ணா!"மிகவும் ரஹஸ்யமான பக்தியோகத்தையும்,அதன் பரிகாரங்களையும் உபதேசிக்கவில்லையே" என்றான் பார்த்தன்

பகவான்–"பார்த்த!இடைவெளி இல்லாமல் அங்வரதம் என்னையே நினைக்க வேண்டும்
என் ஆராதனமான கர்மாக்களை விடாமல் அன்புடன் செய்ய வேண்டும்.
நான் ஸ்வாமி,நீ தாஸன் என்ற தெளிவுடன் என்னையே வணங்க வேண்டும்.
இவ்விதம் உன் மனத்துக்கு நல்ல பரிபாகத்தை உண்டாக்கி அதை என் விஷயத்திலேயே செலுத்தினால் என்னையே அடையலாம்" என்றான் பகவான்.

ஒன்பதாம் பரம ஸாரம் முற்றும்